**செய்தி வெளியீடு எண்:314** **நாள்: 13.06.2013**

**மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வு கூட்டம் குறித்த செய்தி வெளியீடு**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் இன்று 13.6.13 மாலை 3.30 மணியளவில், தலைமைச் செயலகத்தில் சுற்றுச்சூழல் துறையின் செயல்பாடுகள் மற்றும் சட்ட மன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தினார்கள். இக்கூட்டத்தில், துறை சார்ந்த அறிவிப்புகளின் தற்பொழுதைய நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விதி 110 இன்– கீழ் செய்த அறிவிப்புகள் மீது தனிக் கவனம் செலுத்தி உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மேலும் திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சினையின் தற்பொழுதைய நிலை, பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைகளின் செயல்பாடுகள் போன்றவையும் விவாதிக்கப்பட்டது.

வேலூர் தோல் தொழிற்சாலைகளின் பிரச்சனைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றியும் மேலும் அங்கு உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடுகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டது. தவறு செய்யும் தொழிற்சாலைகளின் மீது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வரும் நடவடிக்கை மருத்துவக் கழிவு மேலாண்மை, நகர திடக் கழிவு மேலாண்மை மற்றும் அவைகளின் செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதிகளை மீறிச் செயல்படும் தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள். மேலும் தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளை முறைப்படுத்தி அவற்றின் செயல்பாடுகளை மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர், வாரியத்தின் உறுப்பினர் செயலர், இயக்குநர், சுற்றுச்சூழல் துறை மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**